**R 4485**

# தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே

தேவசித்தமதிலே இளைப்பாறுதலிலே எத்துனை மகிழ்ச்சி, எத்துனை இன்பம்,

என்னதான் நமக்கே நேரிட்டேவிட்டாலும் அவரே நமக்கே நம் பக்கம் இருக்கின்றாரே,

எத்தனை வலிகள் வேதனை இருப்பினும், இந்த சிந்தையே வலிகளைத் தாங்குமே,

மீண்டும் மீண்டும் பெலனடைந்திடவே இதுவே உதவிடும் அனுதினம் நமக்கே,

குளிர்வீசும் காரிருள் இரவினிலே வெளிச்சம் மங்கலாகவே தெரிகின்றதே

பரலோக வெளிச்சமோ அவ்விருளினை நிரப்பியே வெகுவெதுப்பாகவே ஆக்குகின்றதே,

பூரண சமாதானம் இளைப்பாறுதலையே நாளுக்கு நாளே எப்போதும் அவர்க்கே அவரளிப்பாரே,

அவரது கிருபையோ போதுமானதே, இருதயம் பலவீனமாகியே சோர்ந்தே முறுமுறுத்திட வேண்டாமே,

முகத்தினை மேல்நோக்கிப் பார்த்தே நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையிலுமே வேகமாகவே ஓடிட வேண்டுமே ஒரே சீராகவே

தடயம் இல்லா வழிதனிலே, தொடர்ந்தே முன்னேறி ஓடியே வெல்வோம் பரிசதனை.

---